பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

27-11-1992

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 12 வெள்ளிக்கிழமை (27-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 01

## வரலாறு வழிகாட்டி; சத்தியம் சாட்சி

# மாவீரர் தியாகம் வீணாகாதிருக்க போராட்டத்தைத் தீவிரமாக்குவோம்

## தலைவர் பிரபாகரன் செய்தி

யாழ்ப்பாணம், நவம்பர் 27

எமது மக்கள் சிந்திய இரத்தமும், எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண்போகாதிருக்க நாம் உறுதி தளராது போராடுவோம்.

நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர, தொடர்ந்து எமது போராட்டத்தைத் தீவிரமாக்குவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

என்றோ ஒரு நாள் எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால், நாம் எமது நேசக் கரங்களை நீட்டத் தயாராக இருக்கிறோம்.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்றைய மாவீரர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவரது செய்தியின் முழு விவரமும் வருமாறு:

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் தினம்.

எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னதமானவர்களை நாம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்.

மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள்; தாம் தழுவிக்கொண்ட இலட்சியத்தைத் தமது உயிரிலும் மேலாக நேசித்தவர்கள்; மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக் கொண்டவர்கள்; அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.

மனித வாழ்வில் சுதந்திரம் உன்னதமானது. மனித நற்பண்புகளில் தலைசிறந்தது



மனித வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது. சுதந்திரம்தான் மனித வாழ்விற்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது; முழுமையைக் கொடுக்கிறது.

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது.

நாகரீகம் தோன்றிய காலந் தொட்டு, யுகம் யுகமாக மனிதகுலம் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறது; அடிமைத் தளைகளிலிருந்து அடக்குமுறையிலிருந்து விடுதலை பெற விழைந்து வருகிறது. காலம் காலமாக இந்தப் பூமியில் நிகழ்ந்த போராட்டங்கள், புரட்சிகள், யுத்தங்கள் எல்லாம் மனித விடுதலை எழுச்சியின் வெளிப்பாடு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இலவச போக்குவரத்து

யாழ்ப்பாணம், நவ. 27

இன்று மாவீரர் நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களுக்கு இலவச போக்குவரத்துச் சேவைகள் நடத்தப்படும் என்று யாழ். மாவட்ட இந்துராதி சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

உ

## எட்டாவது பிறந்தநாள்

அன்புக்கினிய வாசகர் பெருமக்களே!

உங்கள் பெருமதிப்புக்கும், அளவிலா அபிமானத்துக்கும் உரிய உதயனுக்கு இன்று — நவம்பர் 27 ஆம் நாள் — எட்டாவது பிறந்த நாள் என்பதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

அவனது கடந்த ஏழு வருடத்திய பெரு வளர்ச்சிக்கு அபார ஆதரவும், உறுதி குலையா ஊக்குவிப்பும், உறுதுணையும் நல்கிய வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அன்பர்கள் ஆகிய அனைவருடனும் எமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறோம்; அவர்களுக்கு எங்கள் இதயம் பூரித்த நன்றிகள் உரியனவாகுக.

தமிழ் மக்களின் விடிவுக்கும், தமிழ் மண்ணின் மேம்பாட்டுக்கும் உழைப்பது என்ற உதயனின் உன்னத நோக்கத்தை நீங்கள் நன்கறிவீர்கள்; ஒரு தேசியப் பத்திரிகைக்குரிய சகல கடமைகளையும், மக்களையே மையம் வைத்து அமைந்த சேவைகளையும் உதயன் ஆற்றி வருவதும் உங்களுக்குத் தெரிந்ததே;

உதயன் எப்போதும் தனது சமூகப் பொறுப் புணர்ந்து, எழுத்தின் தெய்வீகம் உணர்ந்து மக்களின் துயரங்களையும், அபிலாசைகளையும் பிரதிபலிப்பதில் முன்னிற்பவன்; மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதும் அவனது கடமைகளில் முன்னுரிமை பெற்று விளங்குகிறது.

இனிவரும் ஆண்டுகளிலும் மக்கள் நலன் நாடி உத்வேகத்துடன் உழைக்க உதயன் இந்த நன்னாளில் உறுதி எடுக்கின்றான்.

அதற்கான நிறைந்த ஆதரவையும், ஒத்துழைப்பையும் தொடர்ந்து உங்களிடம் நாடி நிற்கிறோம். அளவிலா அருள் கருணைக் கடலாம் ஆண்டவனிடமும் இறைஞ்சுகிறோம்;

வணக்கம்

— நிர்வாகத்தினர்.

## மக்கள் கண் விழித்திருந்து மாவீரருக்கு இதய அஞ்சலி

### குடாநாடு எங்கும் சுடரொளிமயம்

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ மண்ணின் விடிவுக்காக தம் இன்னுயிர் ஈந்த தமிழீழ மாவீரர் தினம், நேற்று நள்ளிரவு 12 மணி ஒருவினாடிக்கு ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் சமகாலத்தில் மணிகள் ஒலிக்க ஆரம்பமானது.

மாவீரர் நினைவொலி எழுப்பப்பட்ட போது சகல மக்களும் அந்த அந்த இடங்களில் எழுந்து நின்று இரு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தினர்.

வீதியில் சென்றோரும் வாகனங்களில் சென்றோரும் அவ்வாறே அந்த இடங்களில் நின்று அஞ்சலி செலுத்தினர்

12, 02 நிமிடத்தில் சகல இடங்களிலும், மாவீரர் துயிலும் இல்லங்களிலும் சுடர் ஏற்றப்பட்டது.

மாவீரர் துயிலும் இல்லங்களில்; மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மாவீரர் சுடரை ஏற்றினர்;

மாவீரர் சுடரேற்றும் பாடல்களும் பாடப்பட்டன.

அதைத் தொடர்ந்து விடுத

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழி புதைந்த போது மண்ணுக்குள் சிக்கினர்!

யாழ்ப்பாணம், நவ. 27

நுணாவில் கிழக்கில் நேற்று இடம்பெற்ற குண்டுவீச்சு அனர்த்தத்தின் போது பதுங்குகுழியில் இருந்த சகோதரியும், சகோதரனும் மண்ணினால் மூடுண்டு மூச்சுத் திணறி மரணமானார்கள்.

சுப்பர்சொனிக் விமானங்கள் வீசிய இரு குண்டுகளும் [illegible] விழுந்து வெடித்தன. இத [illegible] இரு வாரங் [illegible]

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சுப்பர்சொனிக் விமானங்கள் நுணாவிலில் குண்டு வீச்சு!

### சகோதரர்கள் மூவர் பலி

தென்மராட்சி, நவ. 27

நுணாவில் கிழக்குப் பகுதியில் நேற்று நண்பகல் இரண்டு சுப்பர்சொனிக் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர். மற்றும் சிலர் காயமடைந்தனர் வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் சாவகச்சேரி வான் பிரதேசத்தில் திடீரெனப் பிரவேசித்த இரு சுப்பர் சொனிக் விமானங்கள் பேரிரைச்சலுடன் சாவகச்சேரிப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டன;

திடீரென விமானங்களில் ஒன்று நுணாவில் கிழக்கில் உள்ள ஞானவைரவர் கோவிலுக்குச் சமீபமாக குடியிருப்புக்கள் மீது அடுத்தடுத்து இரண்டு குண்டுகளை வீசியது வீடு ஒன்றின் பின்புறமாக வெளி வளவில் இரு குண்டுகளும் விழுந்து வெடித்தன. இதனால் அங்கு இரு பாரிய

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய தினம் தேசிய விடுமுறை

மாவீரர் நாளான இன்றைய தினத்தை தேசிய விடுமுறை நாளாக விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்துள்ளனர்.

சிற்றுண்டிச்சாலைகள், மருந்தகங்கள், வைத்தியக் கடைகள் தவிர்ந்த ஏனைய சகல திணைக்களங்கள், வங்கிகள், பாடசாலைகள், கடைகள், மற்றும் சந்தைகள் யாவும் மூடப்பட்டிருக்கும்.

(ஒ-3-15)

## நகரில் இன்று மாபெரும் கூட்டம்

மாவீரர் நாளான இன்று மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அருகிலுள்ள மைதானத்தில் மாபெரும் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

பகல் 2 மணிக்கு கந்தர் மடத்தில் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள், காவல் துறையினர் பங்கேற்கும் அணிவகுப்பு ஆரம்பமாகும்.

அணிவகுப்பு கூட்ட மைதானத்தை அடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகும்.

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கூட்டத்தில் உரையாற்றுவார்கள்.

## கொழும்பில் படைகள் குவிப்பு

கொழும்பு, நவ. 27

கொழும்பு மாநகரில் முக்கிய இடங்களில் நேற்று பெரும் எண்ணிக்கையான இராணுவமும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தன.

இதனால் மக்கள் பதற்றம் அடைந்த நிலையில் காணப்பட்டனர் என்று "வெரித்தாஸ்" செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனின்

(2 ஆம் பக்கம் பார்க்க)

**மாவீரர் இறுதி நாளாம் - இன்று அவர் நினைவாய் மரமொன்று நடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்த சிவகுமாரன் சங்குவேலியைச் சேர்ந்தவர்

கொழும்பு விஜேராம மாவத்தையில் கடந்த செவ்வாய் மாலை தம்மிடம் இருந்த குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சிவகுமாரன் என்ற இளைஞர் மானிப்பாய், சங்குவேலியைச் சேர்ந்தவர் என்றும் — தனது மாமனாருடன் பார்ன்ஸ் பிளேஸில் இவர் தங்கியிருந்தார் என்றும் தெரிய வருகிறது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

## குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை

கொழும்பு நகரில் வெடிக்க வைப்பதற்காக குண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று கறுவாக்காடு மக்கார்தி வீதியில் புலனாய்வு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## மேலும் இருவர் சரண்

வேலூர் தடுப்பு முகாமில் இருந்து கடந்த 16 ஆம் திகதி தப்பிச் சென்ற 19 இலங்கைத் தமிழ்ப் போராளிகளில் மேலும் இருவர் நேற்று பொலீஸாரிடம் சரணடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களையும் சேர்த்து சரணடைந்தவர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது. (இ-எ)

## கொழும்பில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

39 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இராணுவத்தினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## பதுங்கு குழி ..

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

கள் ஏற்பட்டன.

ஒரு குழி சுமார் 12 அடி ஆழமும், 20 அடி அகலமும் கொண்டது. இந்தக் குழியினுள் அமைந்திருந்த பதுங்கு குழி ஒன்றும் அடையாளம் தெரியாதவாறு புதைந்துவிட்டது.

நுணாவிலில் கிழக்கு ஞானவைரவர் கோவிலுக்குச் சமீபமாகவுள்ள—'ஐயர் ஒழுங்கை'யில் — கணபதிப்பிள்ளை இராஜசுந்தரம் என்பவரது வீட்டின் பின்புறமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

பதுங்கு குழியில் பாதுகாப்புக்காக தஞ்சம் புகுந்திருந்த இராஜசுந்தரம் கீதா (23 வயது) அவரது சகோதரனான இராஜசுந்தரம் சிவகரன் (17 வயது) ஆகிய இருவருமே இந்தச் சம்பவத்தின் போது உயிரிழந்தவர்கள் ஆவர்.

பதுங்கு குழியின் வாசலில் இருந்த மற்றொரு சகோதரனான இராஜசுந்தரம் யசோதரன் (வயது 19) சுமார் 10 அடி தூரம் தூக்கி வீசப்பட்டார். எனினும் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று இரவு அவரும் மரணமானார்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

குண்டுவீச்சு நடந்த சமயம் பிரஸ்தாப பிள்ளைகளின் தந்தை மரணச் சடங்கு ஒன்றிற்கும், ஆசிரியையான தாயார் பாடசாலைக்கும் சென்றிருந்தனர்.

திடீரென விமானங்கள் பேரிரைச்சலுடன் வட்டமிட்டபோது வீட்டில் இருந்த பிள்ளைகள் மூவரும் பதுங்கு குழியினுள் தஞ்சம் புகுந்தனர். அப்போதே இந்தப் பயங்கரம் ஏற்பட்டது.

தூக்கி வீசப்பட்டிருந்த யசோதரன் மயக்கம் தெளிந்த பின்னர் நடந்தவற்றை கூறினார்.

அதன் பின்னரே அங்கு கூடியிருந்த பலரும் அந்தப் பகுதியில் மண்ணைத் தோண்டி சுமார் அரை மணி நேரத்திற்குப் பின்னர் புதையுண்ட இருவரையும் மீட்டனர்.

மண்ணுக்குள் இருந்து மீட்கப்பட்ட கீதா சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது. மற்றவரான சிவகரன் மோட்டார் சைக்கிள் ஒன்றில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-5-162-117]

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 06 — 1919

மறைவு: 09 — 12 — 1991

## அமரர் கந்தையா வல்லிபுரம்

திதி: 27 — 11 — 1992

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து எங்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி செய்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் வ. பஞ்சநாதன்.

டவுஸ் வீதி (வைரவ வீதி)
திருநெல்வேலி, தெற்கு,
யாழ்ப்பாணம்.

ஜெசவி வர்த்தக நிறுவனம்,
பிறவுண் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம்.

(5604)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## விருத்தாசலம் இராமச்சந்திரன்

(முன்னாள் இரத்தினபுரி ''சந்திரா ஸ்ரோர்ஸ்'' உரிமையாளர்)

வையத்துள் அறிமுகம்: 22—12—1922 புங்குடுதீவு - 9

தெய்வத்துள் சங்கமம்: 28—10—1992 வேலணை - 2

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து, எங்கள் நல்வாழ்வுக்கு வழிசமைத்துத் தந்த எங்கள் அன்புத் தெய்வத்துக்கு எமது இதய அஞ்சலி மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

34, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(23400)

---

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

## பொன்னையா செல்லத்துரை

(நொத்தாரிஸ் இலிகிதர்)

மலர்வு: 21-01-1907

உதிர்வு: 14-12-1985

திதி: 27-11-1992

''தங்கள் எழுத்து உயிர்கள் என்றும் நினைவை விட்டகலா''

மனைவி மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 942, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இல: 1 துறைமுக வீதி, வாடியடி, பூநகரி.

(23401)

---

யா / கோண்டாவில் சி சி த.க. பாடசாலை

எமது வித்தியாலய பழைய மாணவன், மறத்தமிழன், கர்மவீரன், மாவீரன்,

செல்வன் இராசப்பு உதயகுமார் (கார்த்திக்) அவர்களின்

# 'மாட்சி நயப்பு அரங்கு'



வீரவேங்கை 2 ஆம் லெப்டினன்ட்

## இ. உதயகுமார் (கார்த்திக்)

மைந்தனாய்: 05 — 07 — 1964

மாவீரனாய்: 20 — 12 — 1985

இடம்:- பாடசாலை மண்டபம்.

காலம்:- 1992 — 11 — 27 வெள்ளிக்கிழமை காலை 9 00

தலைமையுரை:- திரு. இ. சிவபாதசேகரம் (அதிபர்)

மௌன அஞ்சலி

மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுதல்

மாட்சி நயப்பு பேருரையாளர்:-

திரு. த. இ. பாலசுந்தரம்
திரு. ந. சபாலிங்கம்
திரு. க திருநாவுக்கரசு (அதிபர்)
திரு லோகதாஸ் (அதிபர்)
திரு. செ. சத்தியமூர்த்தி J. P
திரு. செ. நடராசா J. P
திரு. க. மகேஸ் (அதிபர்)
செல்வி க மார்க்கண்டு (அதிபர்)
திரு. க. ஞானசேகரம் (இளைப்பாறிய அதிபர்)
திரு. க. பேரம்பலம் (கொத்தணி அதிபர்)
திரு. வ. தாவைபா (கொத்தணி அதிபர்)
திரு. இ மகேந்திரன் (கொத்தணி அதிபர்)
திரு. நா. குழந்தைவேலு (மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் – தலைமையகம்)
திரு டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் (விரிவுரையாளர் - யாழ் மருத்துவபீடம்)

மாட்சி நயப்புப் பேருரையை ஏற்போர் உரை:-

திரு. இராசப்பு (தந்தை)

மாவீரர் குடும்பம், போராளிகள் பெற்றோர் மற்றும் அனைவரையும் வந்து நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பாடசாலை முகாமைத்துவ குழுவும்,
திரு இராசப்பு குடும்பத்தினரும்.

(5605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கோஸ்லேவேகியாவுக்குள் நுழைவதற்கு

# பெற்றோல் பவுஸரில் ஒளித்துச் சென்ற 28 ஈழத்தமிழர் மயங்கிய நிலையில் கைது!

கொழும்பு, நவ. 27 பெற்றோல் பவுஸர் ஒன்றுக்குள் ஒளித்து, மாஸ்கோவிலிருந்து செக்கோஸ்லேவேகியாவுக்குள் நுழைந்த 28 இலங்கைத் தமிழர்கள், மயங்கிய நிலையில் செக்கோஸ்லேவேகியா நாட்டு எல்லைப்புறப் பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மாஸ்கோவிலிருந்து செக்கோஸ்லேவேகியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சிக்கையில் இவர்கள் 28 பேரும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கைதான 28 பேரும் தற்போது செக். நாட்டு ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கடத்தல் முயற்சியின் சூத்திரதாரியான இலங்கைத் தமிழர் ஒருவரும் பவுஸரின் சாரதியும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை—

மாஸ்கோவில் சுமார் 5ஆயிரம் இலங்கைத் தமிழர் அவதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-எ)

## திருட்டுக் கோஷ்டி அகப்பட்டது

தென்மராட்சி, நவ. 27 சாவகச்சேரிப் பகுதியில் இது வரை நாளும் திருட்டில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கோஷ்டி ஒன்று கடந்த திங்கள் அதிகாலை சாவகச்சேரி காவல் துறையினரிடம் கையும் மெய்யுமாக அகப்பட்டது.

சாவகச்சேரியில் உள்ள வானொலி திருத்தும் கடை யொன்றில் பொருள்களைத் திருடிக் கொண்டிருந்த சமயம் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் இக் கோஷ்டியைப் பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-117]

## மாவீரர் நாள் நவம்பர் - 27

## மாபெரும் பொதுக்கூட்டம்

இடம்: யாழ். பல்கலைக்கழக மைதானம்.

காலம்: 27 - 11 - 1992 வெள்ளிக்கிழமை

நிகழ்ச்சிகள்: அணிவகுப்பு ஆரம்பம் பிற்பகல் 2-00 மணிக்கு -கந்தர்மடம் சந்தியில் இருந்து ஆரம்பமாகிக் கூட்ட மைதானத்தை வந்தடையும். பொதுக்கூட்ட ஆரம்பம் பி. ப. 5-00 மணி.

1. தேசியக்கொடியேற்றல்
2. ஈகைச் சுடர் ஏற்றல்
3. மௌன அஞ்சலி
4. தலைமையுரை
5. சிறப்புரைகள்
6. கலைநிகழ்ச்சிகள்
★ நாடகம்

தமிழீழ மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

அரசியல் துறை,
யாழ் மாவட்டம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## கொழும்பு பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு, நவ. 27 கொழும்பு பல்கலைக்கழகத்தை உடனடியாக மூடுவதாக அரசாங்கம் நேற்று முன் தினம் அறிவித்தது.

மறு அறிவித்தல் வரை இப் பல்கலைக்கழகம் மூடப்பட்டு இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## முல்லை. கிளிநொச்சியிலும் மாவீரர் வார நிகழ்வுகள்

முறிகண்டி, நவ. 27 மாவீரர் வார நிகழ்வுகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாங்குளம் பிரதேசத்தில் பாலிநகர் சந்தியில் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் மாவீரர்களின் படங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதேசத்தில் வளைவுகளும் அலங்காரங்களும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் அஞ்சலிக் கூட்டங்களும் இங்கு நடத்தப்பட்டு வருகின்றன.

இதேபோன்று மல்லாவியில் பொதுவைத்தியசாலைக்கு முன்பாக அலங்கரிக்கப்பட்ட பந்தல் ஒன்றில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

துணுக்காய் முதல் மல்லாவி வரையான பிரதான வீதி நெடுகிலும் ஆறு அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. (உ-97)

## குடியேற்றத்தை நிறுத்த குருமார், அறிஞர் வலியுறுத்து

''இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்''

தெற்கின் மதகுருமார் மற்றும் அறிஞர்கள் கொண்ட சமாதானக் குழு கொழும்பில் வெளியிட்டுள்ள முதல் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.


பல தசாப்த காலமாக ஸ்ரீலங்கா அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட குடியேற்ற நடவடிக்கைகள் காரணமாக வடக்கு—கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரம் சிறுபான்மையினரது அரசியல் பிரதிநிதித்துவத்திற்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் மாற்றம் அடைந்துள்ளது.

இப்போது இடம்பெற்று வரும் குடியேற்ற நடவடிக்கைகள் யாவும் உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் பிரதான அரசியல் கட்சிகளினால் அரசியல் இலாபம் கருதி முறியடிக்கப்பட்டன.

இப்படி குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. [இ-5]

## மாவீரர் வார சிந்தனை



★ ''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது.''

★ ''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது; எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது.''

★ ''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் எனக்கு சுவையான உணவைத் தந்து என் பசியைத் தீர்த்து வைக்கிறது.''

★ ''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகிறது.''

★ ''இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் நான் களைத்திருக்கும் போதெல்லாம் எனக்கு படுக்கையாக அமைகிறது.''

★ இந்தமண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன்; ஏனெனில் இந்த மண் நான் அயர்ச்சியடையும் போது தனது அற்புதமான இயற்கை எழிலால் எனக்குப் புத்துயிரூட்டுகிறது.''

'' இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண்ணின் விளைந்த உற்பத்திகளை நேசிக்கின்றேன். என் வாழ்வுக்கே ஆதாரமான இந்த மண்ணைக் காக்க நான் எதையுமே இழக்கத் தயாராக இருக்கின்றேன்.''

— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## மழை வீழ்ச்சி

நேற்றுக்காலை 8-30 மணி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பதிவாகிய மழைவீழ்ச்சியின் அளவு 23.1 மி. மீ. என யாழ். வானிலை அவதானிப்பு நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். கே. லோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்றுக் காலை 8-30 மணிவரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பதிவான மழைவீழ்ச்சியின் அளவு 781 3 மி. மீ ஆகும். இது யாழ்ப்பாணத்தின் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியிலும் மிகவும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் அஞ்சலி

பலாலி கிழக்கில் காவலரண்கள் தகர்ப்பின் போது களப்பலியான தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த நான்கு போராளிகளின் புகழுடல்கள் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன் நல்லையா ஞானபண்டிதசோதி
அவர்கள்

மணமகள்:
செல்வி பொன்னுச்சாமி சத்தியலெட்சுமி
அவர்கள்

மாங்கல்ய முகூர்த்தம்: 30—11—1992 திங்கள்
நண்பகல் 11-55—12-45 மணி

இடம்: திலீபன் வீதி, கோண்டாவில் கிழக்கு,
மணமகள் இல்லம்.

தலைப்பாகை சூடல்: காலை 9—10 மணி

இடம்: ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,
மணமகன் இல்லம்.

அன்புடையீர்!
சுற்றம் சூழத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்;

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;
மணமக்களின் பெற்றோர்கள்

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

[5602]

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா-1992

காலம்: 29-11-1992 ஞாயிறு காலை 9-30 மணி.

14-11-1992 சனிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி விழா செய்தித்தாள் அறிக்கை மூலம் பிற்போடப்பெற்றிருந்தது. அவ்விழா 29-11-1992 ஞாயிறு காலை 9-30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். அழைப்பு அனுப்பப்பெற்ற அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யாழ். மத்திய கல்லூரி.

(சி-3900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கலண்டர்கள்

வியாபார சிந்தனையா? விளம்பரம் பற்றிய யோசனையா? மூன்று விதமான அழகிய ஓவ்செட் கலண்டர்கள் உங்கள் விளம்பரத்திற்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது. இன்றே எம்மை நாடுங்கள்! ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[23855]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வியாபாரம் விருத்தியாகுமா? உடல் நோய், மனக்கவலை என்பன தீருமா? கேட்டுப்பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 884, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

(23381)

### பகுதிநேர இலிகிதர்

வர்த்தகத் துறையில் க. பொ. த. உயர்தர பரீட்சையில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்த உயர் கல்வியில் ஆர்வமுடையவர்கள் தேவை. இலக்கம் 140, பலாலி வீதி, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும்.

[5599]

### கண்டெடுக்கப்பட்டது

சரவணை 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிவராத்திரி (400521638V) என்பவரின் அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: சோ. புவனேந்திரன், றெப்பானா, 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

[23394]

### மணமகள் தேவை

யாழ். இந்து, அவுஸ்திரேலியாவில் பிரஜாவுரிமை பெற்ற 32 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற பாவம் குறைந்த (5)Computer Field இல் உயர் பதவி வகிக்கும் மகனுக்கு வைத்திய, பொறியியல், கணக்காளர் துறையில் மணமகள் தேவை; தொடர்பு; கடிதமூலம் அல்லது நேரில்; K. கண்ணன், புதிய கல்வி நிலையம், சங்கரத்தை றோட், வட்டுக்கோட்டை;

(5597)

### தேவை

ஆண் நிர்வாக உத்தியோகத்தர் தேவை; வயது 25 முதல் 30 வரை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். சனி காலை 9 மணிக்கு தொடர்பு கொள்ளவும்: கலை, வர்த்தகக் கல்லூரி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(கி/3809)

### O/L Dec. 1992

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், சித்திரம், நடனம், சங்கீதம், விவசாயம், மனைப்பொருளியல் பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond-Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8883)

### பள்ளி எழுந்தருளாயே

மிக்கவைற் நீல சோப் துணிகளில் அழுக்கை அகற்றிப் பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது; அன்னா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. "திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை" கொண்ட நூலின் பிரதியொன்றை 10 மிக்கவைற் நீலசோப் மேலுறை அனுப்பி அன்பளிப்பாகப் பெறுங்கள்.

(கி-3897)

## அன்புடன் நன்றி

### அமரர் நமசிவாயம் சபாரத்தினம்

யாழ். இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் அமரர் ந. சபாரத்தினத்தின் இறுதிச் சடங்குகளைத் தாமாகவே முன்வந்து நடத்தித் தந்த அன்பர்கள், பக்திப் பண்ணிசை இசைத்த அடியார்கள், சமூகமளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், மலர் மாலைகள், மலர் வளையங்களால் அஞ்சலி செலுத்திய அன்பர்கள், இறுதி ஊர்வலத்தைச் சிறப்புறச் செய்த யாழ். இந்துக்கல்லூரி சமூகத்தினர், இரங்கலுரை நிகழ்த்திய பெரியோர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் அன்புடன் கலந்த நன்றி: தனித்தனியே எங்கள் நன்றியைத் தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

அன்புடன்,
மனைவி, மக்கள், மருமக்களுக்காக
டாக்டர் ச. சிவகுமாரன்.

[23393]

## கேள்வி அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் 1992ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான பின்வரும் வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன;

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில் குறிப்பிட்ட பிரகாரம் கேள்விப் பிணைப் பணத்தையும், கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொண்டதன் பேரில் பெறப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலம் கேள்விகள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்;

பூரணப்படுத்தப்பட்ட கேள்விகளை நேரிலோ, பதிவுத் தபாலிலோ "விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை" என்னும் முகவரிக்கு 07-12-92ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன்பு சேர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 04 12-92ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன்பு பெற்றுக்கொள்ளல் வேண்டும். 08-12-92ஆம் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

போதிய காரணங்களுக்காக கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| வேலையின் பெயர் | கே. ப பணம் | கே. வை. பணம் |
|---|---|---|
| 1. தம்பகாமம் குறுக்கு வீதி திருத்தம் | 100-00 | 500-00 |
| 2. விளையாட்டு மைதானம் ம. வி. வீதி திருத்தம் | 100-00 | 500-00 |
| 3. அல்லிப்பளை கச்சார் வெளிவீதி திருத்தம் | 100-00 | 500-00 |

செல்வி கு. அன்னமயில்
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை,
பளை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை,
பளை, 23-11-1992.
(கி/3902)

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

### கல்வியாண்டு - 93

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம்: 05-12-1992 (சனி)

**விஞ்ஞானம்**
இரா. செல்வவடிவேல் சன்

**கணிதம்**
இந்திரன்
வாமதேவன்
யோகேஸ்வரன்

**தமிழ்/சமயம்**
பண்டிதர்
சுந்தரலிங்கம்
யோகராணி

**சமூகக்கல்வி**
வேலா
சிவநேசன்
நிர்மலா

**ஆங்கிலம்**
மகாலிங்கம்
ரவி
தர்மலிங்கம்
ரமேஸ்

**வர்த்தகம்**
நவம்

[கி-8787]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### கல்வி ஆண்டு - 1993

**O/L**
EVENING CLASSES (3-00 — 6-00)
SAT. & SUN. CLASSES (8-00 — 3-00)

ஆண்டு: 10, 9, 8, 7, 6

★ திறமையால் பிரசித்தமான திறமை அனுபவம் மிக்க யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை;

ஆரம்பம்: 05 - 12 - 1992
(சனி) மாலை 3 மணி

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[கி-3791]

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி கிருஷ்ணர் பாக்கியம்

தோற்றம்: 20 — 03 — 1926
மறைவு: 29 — 10 — 1992

மாதமொன்று ஆனபின்னும்
ஆறவில்லை எம் துயரம்
காண்பதெப்போ? காண்பதெப்போ?
கண்ணில் நீர் ஓயவில்லை;

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றி, உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும். நன்றி கூறிக் கொள்வதுடன், 28 - 11 - 1992 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

க. மார்க்கண்டு (C.T.B.),
849/44, சிவன் புது வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[23388]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

## உள்ளகக் கணக்குப் பரிசோதகர்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

தகைமைகள்:

1. க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கணக்கி யல் உட்பட ஆகக்குறைந்தது 3 வர்த்தக பாடங் களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (Diploma in Accountancy) சான்றிதழ் அல்லது சி. ஐ. எம். ஏ (C. I. M. A.) பகுதி 1 - 3 சான் றிதழ் அல்லது,

அரசாங்க / தனியார் சேவையிலிருந்து இளைப் பாறியவர்கள், ஆகக் குறைந்தது பத்து வருடங் கள் கணக்குப் பகுதிகளில் வேலை செய்த அனு பவம்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 05 - 12 - 1992 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 465,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(இ-3904)

# அறிவித்தல்

## காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், வழக்கம்பரை.

## பங்குப் பணம் ரூபா 100/-

06 - 03 - 1992இல் திருத்தி அமைக்கப்பட்ட கூட் டுறவுச் சட்டத்தின் படி உபவிதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- வைத்திருக்க தவறும் பட்சத்தில் கிளைக் குழு தேர்த விலோ, பொதுச் சபையிலோ. நெறியாளர் குழு விலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே 31 - 12 - 1992க்கு முன்னர் தங்கள் பணத் தொகையை 100/- வைத்திருக்கக்கூடியதாக தங்கள் கிளைகள் மூலம் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

— செயலாளர்.

(இ-3905)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 07 — 1913

மறைவு: 09 — 12 — 1991



வேலணை கிழக்கைச் சேர்ந்த
அமரர்

## வே. பிள்ளையார் கந்தையா

திதி: 27—11—1992

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

30, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டிக்குளி.

(23390)

## மு. காங்கிரஸ் மாநாட்டில் பிரேமா, சிறிமா?

கொழும்பு, நவ. 27

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் வருடாந்த மாநாடு எதிர்வரும் டிசம்பர் 12 ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இம் மாநாட்டில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள் ளும்படி ஜனாதிபதி பிரேம தாஸாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அழைப்பு விடுத்துள்ளார்.

(உ-எ)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 27

இளம் கவிஞர் வேலணை யூர் சுரேஷின் "களத்தி" எனும் கவிதை நூல் வெளி யீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல் லூரியில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. வே. இளங் குமரன் நூலை வெளியிட்டு வைப்பார்.

முன்னணி கவிஞர்கள் பலர் சிறப்புரை, ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

(ஓ)

## மாணவிகளுக்கு உடைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

சுதுகோவளம் ஜெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை யில் ஆண்டு -5 இல் பயிலும் முப்பது சிறுமிகளுக்கு விலை உயர்ந்த உடைகள் அன்ப ளிப்புச் செய்யப்பட்டன.

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச் சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சிதருபானந்தா இந்த அன்பளிப்புகளை வழங்கி னார். அதிபர் திரு. செ. தம்பராசா வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

இதேவேளை பிரஸ்தாப பாடசாலைக்கு அருகில் உள்ள ஆதிகளுக்கும் சுவாமிகள் சேலைகள் வழங்கினார். மொத்தம் 21 குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், யுவதி களுக்குச் சேலைகள் வழங் கப்பட்டன.

(அ)

## கரைவலைகளை எடுத்து வர இணக்கம்?

யாழ்ப்பாணம், நவ. 27

நேர்வே செஞ்சிலுவைச் சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவரின் கரைவலை மீன்பிடித் தொழிலுக்காக வழங்கிய வலைகளை இங்கு எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கக் கட்டுப்பாட்டுத் தலை மையகம் கொள்கை அளவில் இணங்கியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை வட்டாரங்கள் இத்தக வலைத் தெரிவித்தன.

இதே சமயம் —

40 குதிரை வலு இயந்திரங்கள் 10 ஆயிரம் மீற்றர் தங்கூசி வலை மற்றும் காகிதாதிகள் ஆகியவற்றையும் எடுத்துவர அனுமதி கிடைத்துள்ளதாக வும் —

அடுத்துவரும் கப்பலில் அவை இங்கு எடுத்துவரப் படுவதாக ... வட்டா ரங்கள் மேலும் தெரிவித்தன.

# மாவீரர் நினைவுக் கவிதைப் பந்தல்

## வந்தனைக்குரிய அந்த மைந்தரைச் சிந்திக்கின்றோம்

"இந்த மண் எங்கள் சொந்தம்
எதிரி நீ எல்லை மீறி
வந்ததேன்?" என்று சீறி
வலிமையின் முகட்டில் ஏறிச்
செந்தமிழ் மறத்தைக் காட்டும்
செயல், திறன் கொண்ட தீரர்
வந்தனைக்குரிய அந்த
மைந்தரைச் சிந்திக்கின்றோம்.

தனக்கென வாழுகின்ற
தன்னலம் கடந்து சென்று
நினைக்கவும் அரியதான
நித்திய வாழ்வு பெற்றோர்
அனைத்தையும் துறந்து
"நாட்டின் அன்னொன்றே
பெரி"தென்று எண்ணும்
வினைத்திறன் கொண்ட மைந்தர்
விறலினைப் போற்று கின்றோம்,

துணிச்சலின் எல்லை கண்டோர்,
சுதந்திர வேட்கை ஒன்றே
பணிக்கெல்லாம் உந்தல் ஆக்கிப்
பகைப்படை கலங்க வைப்போர்;
கணக்கின்றி வளர்ந்து செல்லும்
சுமையை வெட்டி வீழ்த்தும்
உணர்ச்சிகள் நிரம்பப் பெற்றோர்
உணர்ச்சிகள் உருக்குப் போன்றோர்—

வணக்கத்துக் குரிய அந்த
மகான்களைப் போற்றுகின்றோம்
மணக்கின்ற மலர்கள் தூவி
மவுனமாய் அருச்சிக்கின்றோம்
விளக்குகள் வரிசையாக
வெளிச்சத்தை வீசுமாறு
பளிச்சென ஏற்றி வைத்துப்
பாட்டுகள் பாடுகின்றோம்.

தற்கொலைக் காரர் என்று
தமிழரைப் பழித்துப் பேசும்
அற்பரின் அறியாமைக்காய்
அவரிலை இரக்கம் கொள்வோம்
தற்கொலை செய்தல் என்றால்
தன்னையே கொல்லல் ஆகும்
தற்கொடை செய்தல் என்றால்
தமிழரின் சால்பே அன்றோ?

தம்மையே பிறர்க்குத் தந்த
தற்கொடையாளர் தம்மைச்
செம்மையாய் உணரா அற்பச்
சிறுகுண எதிர்ப்பாளர்கள்
என்ன தான் சொல்ல மாட்டார்?
இவர்களின் பழிப்புப் பேச்சைச்
சின்னாபின்னங்கள் ஆக்கிச்
சிதைப்பதெம் கடமை ஆகும்.

தேகத்தை நீத்து
மோனம்
திருநிலை எய்திவிட்டோர்,
போகத்தை — இந்த வாழ்வின்
பொலிவினைத் — துறந்தோர் அன்றோ!
ஆகையால் அல்லவோ, நாம்
அவர்களைப் போற்று கின்றோம் —
பாவகை பலவும் ஓதிப்
பரவசம் கொள்ளுகின்றோம்.

— முருகையன்.

## மாவீர வேங்கைகளே!

கனவுகள் சுமந்து களவிடைக் கலந்த
காவிய நாயகரே - எம்
நினைவினில் நிறைந்து நெஞ்சினில் நிலைத்த
தேசிய வீரர்களே


உறவுகள் துறந்து உரிமைகள் தேடி
ஓடிய வீரர்களே - வீர
மறவர்கள் ஆகியே மண்ணினைக் காத்திட்ட
மாவீர வேங்கைகளே

எதிரிகள் பாசறை கலங்கிட நின்றெம்
இடர்களைத் தீர்த்தவரே - இன்று
உதயத்தைக் காணும் வேளையில் மண்ணுள்
உறங்கிடும் தியாகிகளே.

— கோகுலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 11 — 1929

மறைவு: 27 — 11 — 1991

அமரர்
### எவ். எம். யோசப்
B. A. (Lond.)

(புனித பெனடிற்க், புனித பத்திரிசியார் கல்லூரி களின் இளைப்பாறிய ஆசிரியர்)

அன்புடனும், பண்புடனும் எமை
நெறிப்படுத்தி பெருவாழ்வு தந்த
அருமைத் தந்தையே!

உங்களை என்றும் அன்புடன் நினைவுகூரும்
-குடும்பத்தினர்.

சோமசுந்தரப் புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

[5595]

ஓம் சாயி ராம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச ஹூ கார்த்திகை மீ பதினைந்தாம் திகதி (30-11-92) திங்கட்கிழமை பூர்வ பக்ஷ ஷஷ்டி திதியும் திருவோண நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் நண்பகல் மணி 12-10க்கு மேல் 1-25க்குள் கும்ப லக்கினத்தில்,

எமது ஏக புத்திரன்
திருநிறை செல்வன்
### சிவபாலன்
(அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
### சிவமதி
அவர்களுக்கும்

திருமணம் செய்ய நயினை நாகபூஷணி அம்பிகையின் திருவருள் பாலித்திருப்பதால் மேற்படி சுப முகூர்த்தம் அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும். அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, புதுமணத் தம்பதிகளை ஆசிர்வதிப்பதுடன் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:

திரு. திருமதி க. துரைஐயா
தம்பதிகள்,
(ஓய்வு பெற்ற அஞ்சல் திணைக்கள
உத்தியோகத்தர்)
கைதடி-நுணாவில்,
சாவகச்சேரி.


திரு. திருமதி கு. சிவசுப்பிரமணியம்
தம்பதிகள்,
(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்கள
தொழில் நுட்ப உத்தியோகத்தர்)
'அம்பிகை பவனம்',
85/11, ஆ. வ. வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்)

[23346]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 1961 — 04 — 24

அரனடியில்: 1989 — 11 — 30

### அமரர் முருகேசு திருஞானசேகரம்

(தமிழாசிரியரும், "புத்தெழில்" மாதசஞ்சிகை ஆசிரியரும், புத்தெழில் புத்தகசாலை உரிமையாளரும்)

மானிடத்தைப் புரிந்து
மகத்தான சேவை செய்தாய்
தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்து
தளராது பாடுபட்டாய்
நன்மாணவர் நெஞ்சங்களில்
நிலையான இடம்பிடித்தாய்.

இவ் உத்தமத்தின் திருவுருவாய் உலவிவந்த கோலம் மது கண்ணீரால் நனைகிறது.

ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்!
— குடும்பத்தினர்.

திருஞானசேகரம் வீதி,
புத்தூர்.

[23390]

## AIKAYES அறிவித்தல்

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட
உற்றார், உறவினர், நண்பர்களுக்கான
### வடபகுதி
### தனியார் உணவு விநியோகம்

எமது நோக்கத்தில் எதிர்பாராத இடையூறு கடந்த காலத்தில் காங்கேசன் துறை முகத்தில் ஏற்பட்டதால், பல இலட்ச ரூபாய்களை இழக்க வேண்டியேற்பட்ட துடன், நீண்ட நெடிய நெருக்கடிகளின் மத்தியிலும், மிக சிரமப்பட்டு நாம் எடுத்த பொறுப்பை எண்பத்தி ஐந்து விகிதம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இப்பொழுது உங்களிடம் இறுதிக் கட்ட விநியோகத்திற்காக முன் வந்துள்ளோம்.

எமக்கு ஏற்பட்ட சோதனைகளால் உங்களின் நேயமான ஆதரவை ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

தயவு செய்து வெற்றுக் கலன்கள், வெற்றுப் பைகள், அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவற்றுடன் விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டு வரவும். சுன்னாகத்திற்கு உங்களை அழைப்பதையிட்டு வருந்துகிறோம். வாராந்த சனிக்கிழமை விநியோகம் இன்றுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் (எடுக்கத் தவறியவர் களும் மிகுதி எடுக்க வேண்டியவர்களும்) | AIKAYES நாகம்ஸ் சினிமா - முன் ஒழுங்கை, முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம். | 15-12-1992<br>17-12-1992<br>19-12-1992 | 8-00 — 5 00<br>8-00 — 5 00<br>8-00 — 5-00 |
| 2. நல்லூர் (எடுக்கத் தவறியவர் களும் மிகுதி எடுக்க வேண்டியவர்களும்) | ,, ,, ,, | 21-12-1992 | 8-00 — 5-00 |
| 3. பிற உ. அ. அ. பிரிவுகள் (எடுக்கத் தவறியவர் களும் மிகுதி எடுக்க வேண்டியவர்களும்) | ,, ,, ,, | 23-12-1992 | 8-00 — 5 00 |

**AIKAYES - JAFFNA.**
முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.

(S-2522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாவீரர் இதுவரை ஈட்டித் தந்தவை

கடந்த நள்ளிரவுப் பொழுதில் ஆலயங்கள், தேவாலயங்களில் மணிகள் மாவீரர் நினைவாக ஒங்கி ஒலித்து மக்களின் உணர்வுகளை ஒருமுகப்படுத்தி நின்றன. உணர்வுகள் ஒன்றிய அந்நிலையில் மக்கள் அனைவரும், இந்த மண்ணின் மீட்புக்காகவும், மக்களின் விடுதலைக்குமாக தமது கிடைத்தற்கரிய இன்னுயிரை ஈந்த ஆயிரம் ஆயிரம் மாவீரர்களையும் மனதில் இருத்தி அஞ்சலி செலுத்தினார்கள். தமது தேசியக் கடமையை நன்றே நிறைவேற்றினர்.

இருண்டு போய்க் கிடக்கும் தமிழர் தேசத்துக்கு விடுதலை என்ற ஒளிப்பிரகாசத்தை ஏற்றுவதற்காகவே மாவீரர்கள் தமது அரிய உயிர்களை அர்ப்பணித்தார்கள். அதனை எடுத்தியம்புவதற்காகக் கடந்த நள்ளிரவில் தமிழர் பிரதேசங்களில் மக்கள் வீடுகள் தோறும், மாவீரர் துயிலும் இல்லங்கள் எங்கும் மாவீரர் சுடர்களை ஏற்றினர். அவை ஒரே வேளையில் எரிந்து ஒளிப்பிரகாசத்தைப் பிரவாகித்தன.

தமிழர்கள் தமது மண்ணில் தம்மைத் தாமே ஆள வேண்டும். தமிழ் மண் அவர்களது தனி நாடாக வேண்டும். அடிமை நிலை மாறி சுதந்திர வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும் — இவற்றைப் பெறுவதற்கு எங்கள் உயிரையும் கொடுப்போம் என்று திடசங்கற்பம் பூண்டு போராடுபவர்கள் தமிழ்ப் போராளிகள். இந்த இலக்குகளை அடைவதற்காக இதுவரை சுமார் ஐயாயிரம் போராளிகள் மாவீரர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களின் தியாகம் வீண்போகவில்லை. வீண் போகக்கூடாது. வீண் போகாது.

இன்றைய மாவீரர் நாள் முற்றிலும் முன்னேற்றகரமான தனி நிலையைக் கண்ட நிலையில் பிறந்துள்ளது. தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். அதனால் அவர்களை ஆயுதம் கொண்டு அடக்கியும் அழித்தும் விடலாம் என்று நினைத்த சிங்களவர்கள் இப்போது நிலைதடுமாறிப்போய் நிற்கிறார்கள். தமிழ்ப் போராளிகளை வெல்ல முடியாது. இப்போது நடக்கும் ஈழப் போர் வடக்கு - கிழக்குடன் நிற்கவில்லை அது எல்லை தாண்டிக் கொழும்புத் தலைநகருக்கும் சென்றுவிட்டது.

இராணுவ வல்லமை தமிழ்ப் போராளிகளுக்கு உண்டென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நெஞ்சினில் நெருப்பு ஏந்திப் போராடும் தியாக வீரர்கள் என்பதால், ஸ்ரீலங்கா அரசு இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நினைப்பது காரியமாகாது என்று எடுத்துக் காட்டப்பட்டு வருகிறது

ஐயாயிரம் விடுதலைப் புலிகளின் வீரச்சாவும், முப்பதாயிரம் மக்களின் உயிர்வேள்வியும் வீண்போகவில்லை என்பதை இப்போதைய முன்னேற்ற நிலை தெளிவாக்குகின்றது.

இந்த நிலையை எய்த உதவியவர்கள் மாவீரர்களும், ஏனைய போராளிகளும் அவர்களை உரிய வழி நடத்திச் செல்லும் தலைவர் பிரபாகரனும் ஆவர்.

தமிழர் மண்ணுக்கும் மக்களுக்குமாக தமது இன்னுயிர் ஈந்த மாவீரர்கள் தமிழர்கள் வாழும் வரை போற்றப்பட வேண்டியவர்கள். மாவீரர் நாளில், மாவீரர் மாதத்தில் மட்டுமன்றி நாளாந்தம், வருடம் முழுவதும் மாவீரர் நினைவு தமிழர் நெஞ்சங்களில் ஒளிர்வதாக!

# மாவீரர் தியாகம் வீணாகா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] வேறு [illegible]

### வரலாற்று நியதி

மனிதனை மனிதன் அடிமை கொள்கிறான்; அழிக்க முயல்கிறான். மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கிறான். அன்று தொட்டு இன்று வரை மனிதனே மனிதனின் முதன்மையான எதிரியாக விளங்கி வருகிறான். ஒருவனது சுதந்திரத்தை இன்னொருவன் விழுங்கிவிட எத்தனிக்கும் போது தர்மம் செத்துவிடுகிறது. உலகில் அதர்மமும், அநீதியும் பிறக்கிறது. சாதி என்றும் வர்க்கம் என்றும் இனம் என்றும் பிளவுகள் எழுந்து மனிதரிடையே முரண்பாடு தோன்றுகிறது; மோதல்கள் வெடிக்கிறது இந்த உலகில் அநீதியும் அடிமைத்தனமும் இருக்கும் வரை, சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும் வரை, விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி ஏனெனில் சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரமும் சுழல்கிறது

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டிப் போராடி வருகிறோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போராட்டம் இன்று உலகரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப்போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களைவிட சாராம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங்களைக் கொண்டது.

### எமது போராட்டம் ஒரு முன்னுதாரணம்

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றுக்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமே இல்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது மாவீரர்களின் இந்த ஒப்பற்ற சாதனைகளால் ஒடுக்கப்படும் உலகிற்கு எமது போராட்டம் ஒரு உந்துசக்தியாக, ஒரு முன்னுதாரணமாக ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

### எமது தனித்துவம்

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது. சாவுக்கு அஞ்சாத அவர்களது துணிவும் உறுதிப்பாடுமே எமது போராட்டத்தின் பலமும் வளமுமாகும். எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் பணத்தையும் வாரி வழங்குகிறது நாம் உலகத்திடம் கைநீட்டி நிற்கவில்லை. எவரிடமும் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில், எமது சொந்த மக்களில், எமது சொந்தக் கால்களில் தங்கி நிற்கிறோம். எமது சொந்தக் கைகளால் போராடுகிறோம். இதுவே எமது தனித்துவத்தின் தனிச் சிறப்பாகும். எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து போகாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்கமுடிகிறது.

புதிய சவால்களும், புதிய நெருக்கடிகளும் நிறைந்ததாக இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் சிக்கலான வரலாற்றுச் சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது.

சமாதானத்தின் கதவுகளை இறுக மூடிவிட்டு போரைத் தீவிரமாக்கம் செய்வதில் எதிரி தீவிர அக்கறை காட்டி வருகிறான். தமிழரின் தேசியப்பிரச்சினைக்கு எந்த உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க அரசு தயாராக இல்லை.

### எதிரிக்கு உணர்த்தினோம்

இவ்வாண்டு என்றுமில்லாத வகையில் யுத்தம் முனைப்புற்று உக்கிரமடைந்தது. எதிரியின் படையெடுப்புத் திட்டங்களை முறியடிக்கும் வகையில் நாம் புதிய போர்த் தந்திரோபாயங்களை வகுத்து தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினோம். இதனால் என்றுமில்லாதவாறு எதிரி களத்தில் இரத்தம் சிந்தினான். வரலாற்றில் நிகழாத பாரிய இழப்புக்களைச் சந்தித்தான். ஆக்கிரமிப்பாளர்களின் காடுகளை இந்த மண் ஒருபொழுதும் சகித்துக் கொள்ளாது என்பதை எதிரிக்கு நாம் நன்கு உணர்த்திக் காட்டினோம்.

போர்முனையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட போதும், போரின் விளைவால் பொருளாதாரம் சீர்குலைந்த போதும், போரில் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என உணர்ந்து கொண்ட போதும் போர் அணுகுமுறையைக் கைவிடுவதற்கு அரசு தயாராக இல்லை. ஆயுதப் படைகளைப் பலப்படுத்தி, ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரப்படுத்தி, இராணுவத் தீர்வை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஆயுத பலத்தால் தமிழினத்தை அடக்கி ஆளவேண்டுமென்ற சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆதிக்க மனோநிலையில் சிறிதளவேனும் மாற்றம் எதுவும் நிகழ்ந்து விடவில்லை!

இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக் கிடக்கும் வரை தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நீதியான, நியாயமான அரசியல் தீர்வை நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து எதிர்பார்க்க முடியாது. இந்தக் கசப்பான உண்மையை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நீண்டதாக, மிகவும் கடினமானதாக, நெருக்கடிகளும் சோதனைகளும் நிறைந்ததாக, எமது விடுதலைப் பயணம் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கிறது; சாத்வீக மென்வழிப் போராட்டத்திலிருந்து ஆயுத எதிர்ப்பு இயக்கம் வரை, இத்தனை காலமாக எத்தனையோ வழிகளில் நீதி கேட்டு நியாயம் கோரி நாம் எழுப்பிய உரிமைக்குரல் சிங்கள தேசத்தின் மனச்சாட்சியைத் தொட்டதாகத் தெரியவில்லை.

### போர் வெறி கொண்ட எதிரி

காலம் காலமாக எமது மக்கள் அனுபவித்த அவலங்கள், சாவும் அழிவுமாக அவர்கள் சந்தித்த அனர்த்தங்கள், சோகத்தின் சுமையால் அவர்கள் சிந்திய இரத்தக்கண்ணீர் இவை எல்லாம் பௌத்த தேசத்தின் காருண்ணியத்தைத் தொட்டதாகத் தெரியவில்லை.

எதிரி ஈவிரக்கமற்றவன்; போர்வெறி கொண்டவன், எமது தாயகத்தைச் சிதைத்து, எமது இனத்தை அழித்துவிடுவதையே இலட்சியமாகக் கொண்டவன். அவனது இதயக் கதவுகள் திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது?

நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர, தொடர்ந்து எமது போராட்டத்தைத் தீவிரமாக்குவதைத் தவிர [illegible] நாம் [illegible] போர் வெறி [illegible] யர்களல்லர். நாம் உண்மையில், ஆன்மரீதியாக, சமாதானத்தையே விரும்புகிறோம் ஒரு நிரந்தரமான, நிம்மதியான, கௌரவமான சமாதானத்தையே விரும்புகிறோம். அதனால்தான் இந்தக் கொடூரமான போரின் மத்தியிலும் சமாதானத்தின் கதவுகளை நாம் திறந்து வைத்திருக்கிறோம் சமாதானத்தின் பாதையை நாம் மூடிவிடவில்லை. அப்படி மூடிவிடும் நோக்கமும் எமக்கில்லை. ஏனென்றால் சமாதானத்தை அடைவதற்காகவே நாம் போராடுகிறோம். என்றோ ஒருநாள் எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளை தட்டுவானாக இருந்தால் நாம் எமது நேசக்கரங்களை நீட்டத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் எமது எதிரியோ வன்முறைமீது காதல் கொண்டவன். அதனால் அன்றிலிருந்து இன்றுவரை ஒரு அநியாயமான யுத்தத்தை எம்மீது திணித்து வருகிறான். இன்று எதிரியின் படையணிகள் எமது வாசல்வரை வந்து போர்முரசு கொட்டுகின்றன. எம்மை அழித்துவிடுவதற்கும் எமது மண்ணை விழுங்கிவிடுவதற்கும் கங்கணம் கட்டி நிற்கின்றன. இந்த இன அழிப்பு யுத்தத்திற்காக எந்த அளவிற்கும் இரத்தம் சிந்த எதிரி தயாராக இருக்கிறான்.

இந்த இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? போராடி எமது மக்களையும், எமது மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதைத் தவிர எமக்கு வேறுவழி எதுவும் உண்டா?

### சுதந்திரம் புனிதமான உரிமை

போராடித்தான் நாம் எமது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டம் அல்ல. அது இரத்தம் சிந்தி வென்றெடுக்கப்படும் ஒரு புனிதமான உரிமை.

நாம் தொடர்ந்து போராடுவோம்; எத்தனை இடர் வரினும், எத்தனை துயர் வரினும், நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தைத் தொடருவோம் எமது மக்கள் சிந்திய இரத்தமும் எமது மாவீரர் புரிந்த தியாகமும் வீண் போகாதிருக்க நாம் உறுதி தவறாது போராடுவோம். எமது இலட்சியப் பயணத்தில் எத்தனையோ சவால்களை, எத்தனையோ ஆபத்துக்களை, எத்தனையோ நெருக்கடிகளை நாம் சந்தித்துவிட்டோம். இனி எம்மை எதுவும், எவரும் அச்சுறுத்த முடியாது நாம் துணிந்து போராடுவோம்; வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கிறது. சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கிறது

எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாய் நிற்கும் மாவீரர்களே!

உங்கள் இரத்தத்தால் எங்கள் விடுதலை வரலாறு மகத்துவம் பெறுகிறது.

உங்கள் இலட்சிய நெருப்பால் எங்கள் போராட்டம் புனிதம் பெறுகிறது.

உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகிறது.

உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது.

எங்கள் தேச சுதந்திரத்தின் சிற்பிகளாகிய உங்களை நாம் சிரந்தாழ்த்தி வணங்குகிறோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

## பதவி உயர்ந்த தட்டெழுத்தாளர் விவரம்

தட்டெழுத்தாளர் சேவை முதலாம் வகுப்புக்கு பதவி உயர்த்தப்பட்டவர்களின் பெயர்கள் இப்போது பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அமைச்சினால் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

## சுப்பர்சொனிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழிகள் ஏற்பட்டன. வீடு ஒன்று பலத்த சேதமடைந்தது. மரங்கள் சில முறிந்து வீழ்ந்தன.

'சுப்பர்சொனிக்' விமானங்கள் சரவலாக வேட்டுக்களையும் தீர்த்தன. இதனால் வீடுகள் பலவற்றில் சிறு சேதங்கள் ஏற்பட்டன.

தாக்குதல் நடந்த சமயம் சாவகச்சேரி நகரப் பகுதியில் கூடியிருந்த பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்; விமானங்களின் பேரிரைச்சலால் சாவகச்சேரி பகுதி எங்கும் பெரும் பதற்றம் நிலவியது. வீதிகளில் சென்று கொண்டிருந்தவர்கள் பாதுகாப்புத்தேடி அங்கும் இங்கும் ஓடி பதுங்கிக் கொண்டனர்; பலர் வயல்வெளிகளை நோக்கியும் ஓடினர்.

நேற்றைய தாக்குதல் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இராஜசுந்தரம் கிதா (வயது 23), அவரது சகோதரர்களான சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் இராஜசுந்தரம் சிவாரன் (வயது 17) இராஜசுந்தரம் யசோதரன் (வயது 19) ஆகிய மூவரும் உயிரிழந்தனர்.

எஸ். யசோதா (வயது18) சுசீலாதேவி (வயது 37) ஆகியோர் காயமடைந்தனர்.

(ஒ-5-162-117-15-78)

### வாழ்க பல்லாண்டு

அனைவரும் விரும்பிடவே
அன்றாடச் செய்திகளை
ஆண்டு ஏழாக
ஆர்வமுடன் தந்தே
இன்றைய காலத்தின்
இணையிலா நற்பணியாய்
ஈழத் தமிழகத்தில்
உலாவி ஒளிவீசும்
உதய சூரியனாய்
என்றும் எம்மத்தியிலே
ஏற்றமுடன் விளங்கிடுக!
ஐக்கியமாய் நம்மக்கள்
நற்புயர்வுடன் உயர்ந்து
ஓங்கு தமிழீழம் மலர
ஒளவை புகழ் தமிழ்
அகிலத்தில் என்றும்
ஆற்றல் மிக்குடையனாய்
இமயம் போலுயர்ந்தே
உதயன் தமிழ்ப்பணியும்
ஊரெலாம் போற்ற
என்றென்றும் ஏற்றமுடன்
வாழி வே! வாழி
பல்லாண்டு!!

நீர்வை குமார் தியாகமணி

## உதயனே, வாழ்த்துகின்றோம்!

சூழும் துயரினால் சோர்ந்துவிடாது
சிறப்புறும் விதமாய்த் தொண்டினைச் செய்து
ஏழு ஆண்டுகள் எம்மவர் வாழ்வினில்
இணைந்தே ஏற்றம் பெற்றிடும் எழிலினில்
நாளும் கலந்து நம்பிக்கை ஒளியாய்
நல்ல கருத்தினை நயமுறத் தந்தாய்
நீளும் புகழுடன் நீ நற்பணி தொடர்ந்திடவே
நெஞ்சார உதயனே! உனை வாழ்த்துகின்றோம்.

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு இல்லாவிட்டால் சமஷ்டி ஆட்சிக்கு ஆதரவாம்

## ஐ. தே. க. - சு. க. புதிய யோசனை

கொழும்பு, நவ. 27

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீண்டும் தனித் தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு தமிழர் கட்சிகள் இணங்குமானால், சமஷ்டி அரசமைப்பு முறையை நாட்டில் ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் முதல் தடவையாக ஒப்புக் கொண்டுள்ளன என்று இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார் வடக்கு - கிழக்கு இணைப்பை ரத்துச் செய்ய தமிழ்க் கட்சிகள் ஒத்துக் கொள்ளுமானால் சமஷ்டி அரசமைப்பு முறையை நாட்டில் ஏற்படுத்துவதை தமது கட்சி ஆதரிக்கும் என்று தெரிவித்தார்.

அமைச்சர் சாகுல் ஹமீது, அரசின் சார்பில் அதற்குத் தமது ஆதரவைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பை ரத்துச் செய்ய தமிழ்க் கட்சிகள் இணங்கினால் மட்டுமே, சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டு வருவதை ஆளும் கட்சியும் ஆதரிக்கும் என்றும் அவர் கூறினார்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய முக்கிய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக ஆளும் ஐ. தே. கட்சிக்கும் முக்கிய எதிர்க்கட்சியான ஸ்ரீ. ல. சு. கட்சிக்கும் இடையே கொள்கை அளவில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக பி.பி.ஸி. நேற்றுத் தெரிவித்தது. (இ-எ-5)

## சுப்பர்சொனிக் பதற்றம்:

# பற்றைக்குள் பதுங்கிய பெண்ணை பாம்பு தீண்டியது

சுப்பர்சொனிக் விமானங்கள் நேற்று சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்டபோது பயத்தினால் ஓடி பற்றைகளுக்குள் ஒளிக்க முயன்ற இளம் பெண் ஒருவரை பாம்பு தீண்டியது!

சாவகச்சேரி, சங்கத்தானையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் குணவிஜயா (18 வயது) என்பவரே பாம்பினால் கடியுண்டவர் ஆவார். (ஒ-117)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா இராசேந்திரம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

சுப்பையா இராசேந்திரம் 21-11-92 அன்று காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சுந்தரா முருகேசு, விக்னேஸ்வரன் திருமதி சுசிலா சோமசுந்தரம், திருமதி சாரதா நடராசா, திருமதி சந்திரா விஸ்வநாதன், திருமதி சுகுணா மனோகரன் கார்த்திகேயன், காம்கேயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் (22-11-92) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

றோகினி,
மானிப்பாய்.

திருமதி ச. விஸ்வநாதன்

(5606)

## திருமதி வாலாம்பிகை இராசையா

திருமதி வாலாம்பிகை இராசையா அவர்கள் 26-11-92 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற State Bank கிறாப்பர் W. A. இராசையாவினது அன்பு மனைவியும், பசோதராவின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய தொழிற் திணைக்கள அதிகாரியும், தொழிற்சட்ட ஆலோசகருமாகிய அருணாநந்தன் புவனேசனின் மாமியாரும், ஊர்மிலா (யாழ். பல்கலைக்கழகம்), சர்மிலா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அசோக்குமார் (யாழ். மருத்துவபீடம்) ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27-11-92) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30க்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. புவனேசன்

(மருமகன்)

173, புகையிரத நிலைய வீதி,
(யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் முன்பாக),
திருநெல்வேலி.

(23398)

## விஸ்வநாதர் முருகேசு

வட்டுக்கோட்டை கொம்படைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மூளாயில் வசித்தவருமான விஸ்வநாதர் முருகேசு காலமாகிவிட்டார்.

அன்னார் மாரிமுத்துவின் அன்புக் கணவரும், கை. தெய்வானைப்பிள்ளை, கதிர்காமத்தம்பி(வரதர்), நாகேந்திரம், சரஸ்வதி, கணேசலிங்கம் நாகலட்சுமி, முத்துலட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனும், கைலாயபிள்ளை இரத்தினேஸ்வரி, அம்பலவாணர் மனோன்மணி, செல்வராணி சிவானந்தன், சிவபுண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27-11-92) காலை 10.00 மணிக்கு கோத்துத்துறை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

மூளாய் தெற்கு,
மூளாய்.

மு. கதிர்காமத்தம்பி
வரதர் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பிறந்த நாளில் இரதத தானம்

யாழ்ப்பாணம், நவ 27

தலைவர் திரு. வே. பிரபாகரனின் பிறந்த நாளான நேற்று பலர் இரத்ததானம் செய்தனர்.

பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் மற்றும் சாதாரண மக்கள் பலரும் யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் கூடினர்.

பலரிடம் இரத்தம் பெறப்பட்டது. மற்றும் பலர் இரத்தம் வழங்க தமது பெயர், விபரங்களைப் பதிந்து விட்டுச் சென்றனர். (ஒ-87-5)

## மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்று பல இடங்களிலும் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் கடல் புலிகள் பிரிவுகள் தோறும் — பல இடங்களில் வைத்தும் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் யாழ். இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரிகளிலும் கௌரவிப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மணலாறு, மன்னார் மற்றும் வன்னிப் பகுதிகள் எங்கும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3 68-17)

## ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை காரைநகர், வலந்தலையில் இருந்து பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி சரமாரியான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

## மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் வானொலி மூலம் உரையாற்றினார்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச செயலகங்கள், பொது இடங்கள் எங்கும் மாவீரர் சுடர் ஏற்றப்பட்டிருந்தது. வீடுகளின் முன்னால் வாழைக் குற்றிகள் நட்டு மாவீரர் சுடரை மக்கள் ஏற்றினர்.

ஒருபுறம் மின்ஒளியும், மறுபுறம் சுடர் ஒளியும் சேர்ந்து ஒளி வெள்ளமாக காட்சி அளித்தன.

அதேவேளை—

நேற்று 6 ஆவது நாளாக மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

மக்கள் உணர்வு பூர்வமாக அதற்கு [illegible] (இ-117-17-68-15)

# 1980 பொது வேலை நிறுத்தம்; அனைவரது பிரச்சினைக்கும் தீர்வு

## தற்கொலை செய்து கொண்டோருக்கும் ரூ. 1 லட்சம்

கொழும்பு, நவ. 27

1980 ஜூலை பொதுவேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்த்து வைக்க அரசாங்கம் தீர்மானித்து உள்ளது.

இது தொடர்பாக கொள்கைத் திட்டமிடல் அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி பிரேமதாஸா சமர்ப்பித்த பல யோசனைகளை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

★ ஜூலை 1980 வேலை நிறுத்தக்காரர்களுக்கு 18-7-1980 தொடக்கம் 1989 மே மாதம் வரை அல்லது அவர்கள் 55 வயதை அடையும் வரையான காலப் பகுதிக்கு — இதில் எது முந்தியதோ — அதன்படி சம்பள நிலுவைப் பணம் வழங்கப்படும்.

மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படாதவர்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களாகக் கணிக்கப்படுவார்கள். இவர்களுக்குரிய பதவி உயர்வுகளும் வழங்கப்படும்.

சேவையில் இருந்து ஒய்வு பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியத்தில் இந்தப் பதவி உயர்வுக்கு ஏற்ப மாற்றம் செய்யப்படும்.

★ உள்ளூராட்சி சேவையில் இருந்த வேலைநிறுத்தக்காரர்கள் சேவையில் இருந்து ஒய்வடையச் செய்தபின்னரும் 55 வயது வரை விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்துக்கு பணத்தைச் செலுத்தும்படி கோரப்பட்டு வந்தனர்.

இவ்வாறு அவர்களிடம் இருந்து நிதியைக் கழிப்பது நிறுத்தப்படும். இதற்கு ஏற்ப உள்ளூராட்சி ஒய்வூதிய விதியில் திருத்தம் செய்யப்படும். ஒய்வில் அனுப்பப்பட்ட பல இளம் ஊழியர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 80 சதவீதம் என்ற அடிப்படையில் இழப்பீட்டுப் படி வழங்கப்படும்.

★ 1980 ஜூலை 18 ஆம் திகதிக்கு முந்திய சேவைக்காக போனஸ் பணத்தை ஊழியர்களுக்கு வழங்கத் தவறிய கூட்டுத்தாபனங்களுக்கு அவற்றைச் செலுத்தும்படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

★ வேலை மற்றும் சலுகைகளை இழந்ததினால் ஏற்பட்ட மன விரக்தி காரணமாக 1980ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்கும் 19-5-1989க்கும் இடைப்பட்ட காலத்தில் தற்கொலை செய்துகொண்ட அல்லது மரணமடைந்த உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும். (ஒ-எ)

# சித்த மருத்துவ மாணவர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

யாழ்ப்பாணம், நவ. 27

தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்த யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை மாணவர்கள் நேற்று முதல் மீண்டும் வகுப்புகளுக்கு செல்வது என முடிவு செய்துள்ளனர்.

சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் திரு. எஸ். பவானியின் ராஜினாமாவைத் தொடர்ந்து எழுந்த நிலைமையை அடுத்து கடந்த 16, 17ஆம் திகதிகளிலும் பின்னர் கடந்த திங்கள் முதலும் சித்த மருத்துவத்துறை மாணவர்கள் தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்தது தெரிந்ததே.

டாக்டர் பவானியின் திறமை, சேவை, கடின உழைப்பு ஆகியவற்றையும் சித்த மருத்துவத்துறைக்கு அவரின் அவசியத்தையும் கருத்திற்கொண்டு துறைத் தலைவர் பதவியை மீண்டும் ஏற்குமாறு யாழ்.பல்கலைக்கழக. பேரவை அவரிடம் கோரியிருப்பதாகவும்—

மாணவர்களின் நன்மை கருதியும் துறை வளர்ச்சி கருதியும் மீண்டும் டிசம்பர் முதலாம் திகதி தொடக்கம் துறைத் தலைவர் பதவியை ஏற்க டாக்டர் பவானி தீர்மானித்திருப்பதாகவும்—

சித்த மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு, மீண்டும் வகுப்புகளுக்குச் செல்ல முடிவு செய்திருப்பதாக சித்த மருத்துவ மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

மேலும் சித்த மருத்துவத் துறையை தனிப்பிரிவாக துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு பல்கலைக்கழகப் பேரவை சிபாரிசு செய்துள்ளதாகவும்—

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததும் இது செயல்படுத்தப்படும் என்றும் மாணவர் மன்றம் தெரிவித்துள்ளது.

உ

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஓம் விராட் விஸ்வப் பிரம்னே நம



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 14 | 08 |
| 10 | 12 |
| 1930 | 1991 |

விஸ்வகர்மகுல திலகர்

## செல்லப்பா சிவஞானம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள், மருமகன்
பாஸ்கரசிங்கம்.

(23402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org